**OPEN ACCESS**

Manuscript ID: TAM-09032024-8410

Volume: 9

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.10.2024

Accepted: 24.12.2024

Published: 01.01.2025

Citation:
Ganeson, Navin G., and Manonmani Devi Annamalai. "Is 'Silapathikaram' An Epic of Justice?" *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 3, 2025, pp. 37–43.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i3.8410

*Corresponding Author:
navingganeson@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Is 'Silapathikaram' an Epic of Justice?

**Navin G Ganeson**
*Postgraduate Student, Master of Education*
*Sultan Idris Education University, Tanjong Malim, Malaysia*
*https://orcid.org/0000-0003-2683-0355*

**Manonmani Devi Annamalai**
*Associate Professor, Faculty of Languages and Communication*
*Sultan Idris Education University, Tanjung Malim, Malaysia*

**Abstract**
*This study was carried out based on one of the five epics, Silapathikaram.The main objective of this study is to find out whether the Silapathikaram are written based on justice points.This study was carried out in a qualitative approach. The data for this review was handled in a library research approach. This research has been carried out in a descriptive approach using books, research articles, etc. suitable for this type of library research.In this study, six concepts of justice were identified.Through this study, evidence has been able to confirm that Silapathikaram is an epic of justice.*
***Keywords:*** *Silapathikaram, Epic, Justice*

**References**

1. Kasirajan, R., & Sankareswari, S. B. (2021). Silappathikaram Is an Art Epic. Journal of Valartamil, vol. 2, no. 2, pp. 97-103.
2. Narayana, V. (2019). Aimperum Kaappiyangal-The Five Classics of Tamil - Synopsis and dissertation.Chennai: Narmadha Pathipagam.
3. Subramanian. (2020). Aimperumkaappiyangal (Moolamum Telivuraiyum). Chennai: Manivaasagar Publication.
4. Varadarasan, M. (2015). Tamizh Ilakkiya Varalaru - History of Tamil Literature. Chennai: Sahitya Akademi.

# சிலப்பதிகாரம் நீதியின் காவியமா?

**நவீன் கணேசன்**
முதுகலை மாணவர், முதுகலை கல்வி
சுல்தான் இட்ரிஸ் கல்விப் பல்கலைக்கழகம், தஞ்சோங் மாலிம், மலேசியா

**முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை**
இணைப் பேராசிரியர்கள், மொழிகள் மற்றும் தொடர்பாடல் பீடம்
சுல்தான் இட்ரிஸ் கல்விப் பல்கலைக்கழகம், தஞ்சோங் மாலிம், மலேசியா

**ஆய்வுச் சுருக்கம்**
*சிலப்பதிகாரம் எனும் ஐம்பெரும் காப்பியத்தில் ஒன்றான காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் முக்கிய நோக்கமானது, சிலப்பதிகாரக் காப்பியம்நீதிக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதாகும். இவ்வாய்வு, பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுக்கான தரவுகள் யாவும் நூலக ஆய்வு அணுகுமுறையில் கையாளப்பட்டுள்ளன. இவ்வகை, நூலக ஆய்விற்கு ஏற்புடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகளைப் பயன்படுத்தி விளக்கவியல் அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கிடைக்கப் பெறும் தகவல்கள் அனைத்தும், ஆய்வின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளன. ஆராயப்பட்ட, தரவுகளை ஆய்வு நோக்கத்திற்கு ஏற்ப வகைப்படுத்தி, பத்தி* (Text analysis) *முறையில் பகுத்தாயப்பட்டுள்ளன. இந்த ஆய்வில், ஆறு நீதிக் கருத்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் வாயிலாகச் சிலப்பதிகாரம் ஒரு நீதிக் காப்பியம் என்று சான்றுகளின் வழி உறுதி செய்ய முடிந்துள்ளது.*
***முக்கியச் சொற்கள்:*** *சிலப்பதிகாரம், காப்பியம், நீதி*

**முன்னுரை**

காப்பியம் என்ற சொல்லுக்கு முன்பு, அந்த வகை இலக்கியத்தைப் "பொருள் தொடர்நிலைச் செய்யுள்" என்றே இலக்கிய உலகில் கூறப்பட்டுள்ளது. காப்பிய வரலாறு கி. பி இராண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தொடங்கியுள்ளது. காப்பியம் என்றால் என்ன? காப்பியம் என்பது யாப்பிலக்கண மரபுகளைக் காத்து எழுதப்படும் தமிழ்க்கவிதை இலக்கிய வடிவங்களில் ஒன்றாகும். இதைப் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பெருங்காப்பியம், அறம், பொருள், இன்பம், வீடு என்பவையோடு ஈடு இணையில்லாத் தலைவனையும் தலைவியையும் கொண்டு இயற்றபடுவது ஆகும். மேற்குறிப்பிட்ட நான்கு பொருளையும் குறிப்பிடாமல் சில பொருள் மட்டும் எடுத்துரைப்பது சிறு காப்பியமாகும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது (Navin, 2022).

அவ்வகையில், சிலப்பதிகாரம் என்பது தமிழ் இலக்கியத்தில் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகும். பெண்கள் காலில் அணியும் அணிகலனான சிலம்பை மையமாகக் கொண்டு இக்காப்பியம் அமைந்ததானல் "சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்" என்ற பெயர் பெற்றது. தமிழில் படைக்கப்பட்ட முதல் காப்பியம், இயல், இசை, நாடகம் என முத்தமிழைக் கொண்ட காப்பியம், சேர, சோழ, பாண்டியர்களை ஒருக்கிணைக்கும் ஒருமைப்பாடு உடைய கதை, கோவலன் என்ற குடிமகனைப் பாட்டுடைத் தலைவனாகக்

கொண்டதால் முதல் குடிமக்கள் காப்பியம் என்ற பல சிறப்பினைக் கொண்டமைந்த காப்பியமாகும். புகார்க்காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் எனும் மூன்று காண்டப் பிரிவாக இன்பத்தையும் துன்பத்தையும் கலந்து எழுதப்பட்ட இக்காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள் ஆவார். ஆக, சிலப்பதிகாரக்காப்பியம், நீதிக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளதா என்று ஆராய்வதே, இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

## ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வு, பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவைத் தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

## தரவுப் பகுப்பாய்வு

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற நீதியைச் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது. அரசியலில் தவறு செய்வபருக்கு அந்த அறமே அதற்குரிய தண்டனை வழங்கும்; எமனாக மாறும் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. அரசியல் என்பது நல்ல முறையில் ஆட்சி செய்து வருவதே. ஒரு வழக்கையோ சிக்கலையோ நல்ல முறையில் இரு பக்கமும் தீர விசாரித்து, நடுவுநிலைமையில் இருந்து தீர்ப்பு வழங்குவது தான் நல்ல ஆட்சி முறையைக் காட்டும். ஆனால், இக்காப்பியத்தில் பாண்டிய மன்னன் தீர ஆராயாமல் "அக்கள்வனைக் கொன்று அச்சிலம்பை இங்குக் கொணர்க" என்று காவலாளிக்கு ஆணை இட்டுள்ளான். இச்சூழலை,

***தேரா மன்னனின் ஆணை***
***சினையலர் வேம்பன் தேரான் ஆகி,***
***ஊர்காப் பாளரைக் கூவி ஈங்கென்***
***தாழ்பூங் கோதை தன்கால் சிலம்பு***
***கன்றிய கள்வன் கையது ஆகின்,***
***கொன்றச் சிலம்பு கொணர்க, ஈங்கு..***
***(மதுரைக் காண்டம் - கொலைக்களக் காதை - பா. 150)***

மேற்காணும் பாடல் விளக்குகிறது. பிறகு, பாண்டிய மன்னன்தான் கூறிய தீர்ப்புக்காக வருந்தி அக்கணமே இறந்து விடுகிறான். இச்சூழலை,

***பாண்டியன் தவறு உணர்ந்து சாதல்***
***யானோ அரசன்? யானே கள்வன்!***
***மன்பதை காக்கும் தென்புலங் காவல்***
***என்முதல் பிழைத்தது; கெடுக 'என், ஆயுள்!' என***
***மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே, தென்னவன் -***
***(மதுரைக் காண்டம் - வழக்குரை காதை - பா. 75)***

மேற்காணும் பாடல் எடுத்துரைக்கிறது. பாண்டிய மன்னன் அரசியலில் அறம் தவறி வழங்கிய தீர்ப்பினால் அந்த அறமே அவனை இறுதியில் கொன்று விடுகிறது. ஆகவே, அரசியலில் நெறியும் அறமும் தவறாமல் நல்ல ஆட்சியைச் செய்ய வேண்டும். இல்லையெனின், அந்த அறமே நமக்குக் கேடு விளைவிக்கும் என்ற நடுவுநிலைமையைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

## ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்

சிலப்பதிகாரம் உணர்த்தும் நீதியானது, ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதாகும். அதாவது, வினைப்பயன் விடாது தொடரும் என்பதைக் குறிக்கின்றது. ஊழ்வினை அல்லது வினைப்பயன் என்பது நல்ல வினை அல்லது தீய வினை என்று இரண்டாகப் பிரிக்கலாம். நல்ல செயல்கள் செய்தால் நமக்கான நன்மையும்; தீய செயல்கள் செய்தால் நமக்கான துன்பமும் எப்போது ஆனாலும் கண்டிப்பாக வந்தே தீரும். இக்காப்பியத்தில் கோவலனுக்கு நடந்த அவலத்திற்கு அவனே காரணம் ஆகிறான். இதை,

**கோவலனின் முற்பிறப்புக் கதை**
**பரதன் என்னும் பெயரன்அக் கோவலன்**
**விரதம் நீங்கிய வெறுப்பினை ஆதலின்**
***(மதுரைக் காண்டம் - கட்டுரை காதை - பா. 154)***

என்ற இப்பாடல் கூறுகிறது. குறிப்பாக, முற்பிறப்பில் பரதன் என்ற பெயருடைய கோவலன் வசு மன்னனிடம் (பாண்டிய நெடுஞ்செழியன்) வேலை செய்து வந்தான். அப்போது அவன் அயல்நாட்டு வணிகனும் நல்லவனுமான சங்கமன் (கோவலன்) என்பவனை அயல்நாட்டு ஒற்றன் என மன்னனிடம் கூறி அவனது கொலைக்குக் காரணமானான். கொலை செய்யப்பட்ட சங்கமன் மனைவி நீலி (கண்ணகி) சாபமிட்டு அந்த நேரத்தில் உயிர் துறப்பாள். இதை,

**எம்உறு துயரம் செய்தோர் யாவரும்**
**தம்உறு துயரம் இற்றா குகீஎன்றே**
***(மதுரைக் காண்டம் - கட்டுரை காதை - பா. 167)***

என்ற மேற்காணும் பாடல் இயம்புகிறது. இந்திர விழாவின் போது கோவலனும் மாதவியும் மகிழ்ந்து பாடிய கானல்வரிப் பாட்டில் ஊழ் தன் விளையாட்டைத் தொடங்குகிறது. முதலில் ஊழ்வினை உருத்த தொடங்கிய போது, கண்ணகியைப் பிரிய கோவலன் பாடிய பாடலில் தன் மனத்தில் வேறு பெண்ணின் மீது கோவலனுக்கு விருப்பம் இருக்கிறது என்பதனைக் குறிப்பால் பொருள் கண்ட மாதவி, கோவலனிடம் இருந்த யாழினைத் தான் வாங்கி, தானும் ஒரு குறிப்பினால் பாடுகிறாள். இதை இப்பாடல்,

**கோவலினின் நெடும் பிரிவு**
**கானல் வரியான் பாடத் தான்**
**ஒன்றின்மேல் மனம் வைத்து**
**மாயப் பொய் பலகூட்டும் மாயத்தாள்**
**பாடினாள்' என**
**யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை**
**வந்து ருத்தது**
***(புகார்க் காண்டம் - கானல் வரி - பா. 225)***

காட்டுகிறது. பின்பு, மாதவியைப் பிரிந்து கோவலன் திரும்பி வந்த பொழுது கண்ண கியை அழைத்துக் கொண்டு முந்தைய தீவினையால் கோவலன் மதுரைக்குப் புறப்படுவான். இதுவும் ஊழ்வினையின் அடுத்தப் படியாகும். இதை,

**வாயிற் கடக்கும் கோவலன் - கண்ணகி**
**காரிருள் நின்ற அடைநாள் கங்குல் -**
**ஊழ்வினை கடைஇ உள்ளம் துரப்ப**
***(புகார்க் காண்டம் - நாடுகாண் காதை - பா. 3)***

இப்பாடல் உணர்த்துகிறது. இறுதியாக, முன்வினைப் பயனைத் தரும் காலம் என்பதால் எதையும் ஆராயாமல் "கள்வனைக் கொன்று அச்சிலம்பு கொணர்க" என்பான் பாண்டிய மன்னன். இதை,

**கன்றிய கள்வன் கையது ஆகின்,**
**கொன்றச் சிலம்பு கொணர்க, ஈங்கு..**
***(மதுரைக் காண்டம் - கொலைக்களக் காதை - பா. 150)***

இப்பாடல் காட்டுகிறது. ஆகவே, நல்ல வினை, தீய வினை இரண்டுமே தவறாது வந்து சேரும் என்பதனை அறிந்து என்றும் நல்லதையே செய்ய வேண்டும் என்ற நீதியை ஊழ்வினை மூலம் உணர்த்தப்பட்டுள்ளது. ஆக, ஊழ்வினை வாழ்வினில் உருத்தும் என்ற நீதியைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்**

இதைத் தொடர்ந்து, உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல் என்ற நீதியையும் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது. அதாவது கற்புடைய பெண்களை, உயர்ந்தவர்கள் என்றும் போற்றுவார்கள் என்பது ஆகும். பெண்களின் கற்பு தன்மைக்கு இத்தகைய சிறப்பு உள்ளதை இக்காப்பியம் காட்டுகிறது. இக்காப்பியத்தில் கண்ணகி தன் கணவனைத் தவிர வேறு எந்தவோர் இறைவனையும் தொழ மாட்டாள். இதை,

**தெய்வம் தொழுதிட வேண்டும் தேவந்தி**
**தாம் இன்புறுவர் உலகத்துத், தையலார்**
**போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பார்;**
**யாம்ஒருநாள்**

***ஆடுதும்' என்ற அணியிழைக்கு;அவ் ஆயிழையாள்,***
***"பீடு அன்று' என இருந்த பின்னரே; நீடிய***
***(புகார்க் காண்டம் - கனாத்திறம் உரைத்த காதை - பா. 64)***

என்ற பாடலின் வழி தேவந்தி கண்ணகியை நோக்கி "தாழை மலர் மணம் பரப்பும் நெய்தல் நிலத்துச் சோலையில் சோமகுண்டம், சூரியகுண்டம் எனும் இரு பொய்கைகள் உள்ளன. அப்புண்ணியத் தீர்த்தங்களில் மூழ்கிக் காமவேள் கோட்டம் சென்று காமதேவனைத் தொழுதால் பெண்கள் இப்பிறவியில் தன் கணவருடன் கூடிப் பிரியா வாழ்வு வாழ்ந்து இன்புறுலாம். எனவே நாமும் ஒரு நாள் அவற்றில் நீராடுவோம்' என்று சொல்ல; அதுகேட்ட கண்ணகி, அப்படிக் குளத்தில் மூழ்கி மற்ற தெய்வம் தொழுதல் தவறென்று உரைத்தாள், கண்ணகி. கணவனைத் தெய்வமாகத் தொழக்கூடியவர்கள் மற்ற தெய்வத்தைத் தொழ வேண்டியதில்லை என்பதனைக் கண்ணகி வாயிலாகச் சிலப்பதிகாரத்தில் உணர்த்தபடுகிறது.

**கண்ணகி தெய்வமானது**

***தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுவாளைத்***
***தெய்வம் தொழும்தகைமைதிண்ணிதால் - தெய்வமாய்***
***மண்ணக மாதர்க் கணியான கண்ணகி***
***விண்ணகமா தர்க்கு விருந்து***
***(மதுரைக் காண்டம் - கட்டுரை காதை - பா. 15)***

என்ற பாடலில் கற்புடைய பெண்களைத் தெய்வமே வணங்கும் என்று கண்ணகி இறுதியில் கடவுள் ஆனதும் பெண்களின் கற்பின் சிறப்பை உணர்த்துகிறது. ஆகவே, கற்பில் சிறந்தோரை இறைநிலையில் வைத்துப் போற்றிய தன்மையும், தெய்வமாக வழிபட்ட தன்மையும் வழக்கத்தில் இருந்தது தெரிகின்றது.

**நிலையாமை**

அதனைத் தொடர்ந்து, சிலப்பதிகாரம் உணர்த்தும் நீதியானது இளமை, உடல், செல்வம் நிலையில்லாதது என்பதாகும். மனித வாழ்வில் இளமை, உடல், செல்வம் போன்றவைகள் நிலைத்து இருக்காது என்ற நீதிக் கருத்தை உணர்த்துகிறது. சிலப்பதிகாரத்தில், வணிகக் குலத்தில் பிறந்து ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்து வரும் கோவலன் ஒரு கட்டத்தில் தனது அனைத்துச் செல்வங்களையும் விற்றுத் தீர்க்க, அவனிடம் உள்ள செல்வம் நிலையில்லாமல் அழிந்து போகிறது. பின்பு, புதுவாழ்வு தொடங்கச் செல்வம் இன்மையால் கண்ணகியின் ஒரு காற்சிலம்பை விற்கின்றான், கோவலன். இதை,

**கோவலன் வருகை**

***சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிக்***
***குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த;***
***(புகார்க் காண்டம் - கனாத்திறம் உரைத்த காதை - பா. 68)***

என்ற பாடலும்;

***கோவலன், கண்ணகியைப் பாராட்டி பிரிதல்***
***கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி***
***சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டு யான்போய்***
***மாறி வருவன்; மயங்காது ஒழிகஎனக்***
***(மதுரைக் காண்டம் - கொலைக்களக் காதை - பா. 91)***

இந்தப் பாடலும் கூறுகிறது. பிறகு, உடல் அல்லது யாக்கை என்பது வாழ்க்கையில் நிலையில்லை என்று கோவலன், பாண்டிய மன்னன், கோப்பெருந்தேவி என்பவர்களின் இறப்பு நமக்கு உணர்த்துகிறது. உடல் என்பது சிற்றின்பம் கடந்து இறைவனிடம் முத்தி அடைய வேண்டுவதற்குக் கிடைத்த ஒரு தற்காலிகப் பாத்திரம் ஆகும். இதை,

**பாண்டியன் தவறு உணர்ந்து சாதல்**
**என்முதல் பிழைத்தது; கெடுக'என், ஆயுள்!'என**
**மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே, தென்னவன் -**
**கோப்பெருந் தேவி, குலைந்தனள், நடுங்கிக்**
***(மதுரைக் காண்டம் - வழக்குரை காதை - பா. 75)***

என்ற பாடல் விளக்குகின்றது. ஆகவே, இளமையில் ஆட்டம் போடாமல், செல்வம் மீது மோகம் கொள்ளாது, இறைவன் அளித்த உடலைத் தவறாகப் பயன்படுத்தாமல் வாழ வேண்டிய அறநெறியோடு வாழ வேண்டும் என்ற நீதியைச் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.

### ஆழ்ந்த அன்பு நிலைக்கொள்ளும்

இதனை அடுத்து, ஆழ்ந்த அன்பு நிலைக்கொள்ளும் என்ற நீதியைச் சிலப்பதிகாரம் உணர்த்துகின்றது. அஃதாவது, இந்த உலகமே அன்பினாலே ஆனது என்றும் இறைவனும் அன்பும் ஒன்றும் என்று திருமூலர் கூறியுள்ளது அன்பின் பொருளையும் ஆழத்தையும் கூறுகின்றது. இத்தகைய அன்பு உறவுகளுக்கு இடையில் உண்டென்றால் அந்த உறவு காலம் கடந்தும் நிலைத்து நிற்கும். மேலும், தூய்மையாகவும் முழுமையாகவும் அன்புச் செலுத்தியவர்க்கு அந்த அன்பே அவர் வேண்டுவதைக் கொடுத்து விடும். சிலப்பதிகாரத்தில், கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்தபோதும் கண்ணகி, விட்டுப் பிரிந்த கணவன் திரும்பி வரவில்லை என்றாலும், அவர் என் மனத்திலிருந்து நீங்காமல் என்றும் இருப்பார் என்று கூறும் பாடல் கண்ணகி கோவலன் மீது கொண்டுள்ள ஆழ்ந்த அன்பினைக் காட்டுகின்றது. இதை,

**மனம் ஒன்றிய காதலர்**
**கைதை வேலிக் கழிவாய் வந்துஎம்**
**பொய்தல் அழித்துப் போனார் ஒருவர்!**
**பொய்தல் அழித்துப் போனால் அவர்நம்**
**மையல் மனம் விட்டு அகல்வார் அல்லர்!**
**(புகார்க் காண்டம் - கானல் வரி - பா. 192)**

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. கண்ணகியின் உயர்ந்த, ஆழ்ந்த அன்பே கோவலனை மாதவியிடம் இருந்து மீட்டு மீண்டும் கண்ணகியிடம் அழைத்து வரச் செய்தது. இதை,

**கோவலன் வருகை**
**காவலன் போலும், கடைத்தலையான் வந்து-நம்**
**கோவலன்!' என்றாளோர் குற்றினையாள். கோவலனும்**
**பாடமை சேக்கையுள் புக்குத்தன் பைந்தொடி**
**வாடிய மேனி வருத்தம் கண்டு யாவும்**
**(புகார்க் காண்டம் - கனாத்திறம் உரைத்த காதை - பா. 65)**

என்ற பாடலின் வழித் தெரிந்து கொள்ள முடிகின்றது. கண்ணகி கோவலன் மீது கொண்ட இந்த அன்பு உலகம் முழுவதும் இன்றுவரை நிலைத்து நிற்கிறது. எனவே, ஆழ்ந்த அன்பு நிலைக்கொள்ளும் என்றும் நிலைக்கும் என்ற நீதியை இக்காப்பியம் உணர்த்துகிறது.

### இருப்பவற்றை மற்றவருக்கு ஈதல் சிறப்பு

இருப்பவற்றை மற்றவருக்கு ஈதல் சிறப்பு என்ற நீதியையும் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது. நம்மிடம் கொழிக்கும் செல்வத்தையோ நம்மால் இயன்ற உதவிகளையோ இல்லாதவர்க்குத் தகுந்த நேரத்தில் கொடுத்து உதவ வேண்டும். நம்மிடம் இருக்கும் செல்வமே பிறருக்குக் கொடுப்பதற்குத் தான் என்று உணர்ந்து செயல்பட வேண்டும். சிலப்பதிகாரத்தில் பல இடத்தில் ஈதல் அல்லது கொடை வழங்குதலும் தகுந்த நேரத்தில் உதவி செய்தலும் காணமுடிகின்றது. மாதவியுடன் கோவலன் வாழ்ந்த காலத்தில் மாதவி மகளுக்கு மணிமேகலை பெயர் சூட்டு விழாவின் போது கோவலன் பலருக்கும் குறிப்பாக இல்லாதவர்க்கு, முதியவர்க்குப் போன்றோர்க்கு எல்லாம் கொடை வழங்கியுள்ளான். இதை,

**கொடை வள்ளல் கோவலன்**
**பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக,**
**எள்ளிய மனையோள், இணைந்துபின் செல்ல,**
**வடதிசைப் பெயரும் மாமறை யாளன்,**
**கடவது அன்று நின் கைத்தூண் வாழ்க்கை;**
**வடமொழி வாசகம் செய்த நல்லேடு**
**கடன்அறி மாந்தர் கைநீ கொடுக்கஎன**

***பீடிகைத் தெருவின் பெருங்குடி வாணிகர்***
***(மதுரைக் காண்டம் -***
***அடைக்கலக் காதை - பா. 55)***

என்ற பாடலில் கோவலனின் கொடையை வாழ்த்திப் பாடியது தெரிகின்றது. அடுத்து, தவறாக எண்ணி கீரியைக் கொன்ற பழி பாவச் செயலுக்காகக் கணவனை இழந்து காணப்படும் அந்தணப் பெண்ணின் பாவம் நீங்கும் வகையில் நிரம்பத் தானம் செய்து, அவளைக் கணவனுடன் மீண்டும் ஒன்றிணைத்தான், கோவலன். கோவலன், யாரோ ஒரு பெண்ணிற்காகத் தனது செல்வத்தை வாரி வழங்கியுள்ளான் என்பது அறிய முடிகின்றது. இதை,

***பார்ப்பனத்தியின் துயர் போக்கல்***
***அஞ்சல்! உன்தன் அருந்துயர் களைகேன்;***
***நெஞ்சுறு துயரம் நீங்குக என்று, ஆங்கு***
***ஓத்துடை அந்தணர் உரைநூற் கிடக்கையின்***
***தீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்***
***தானம் செய்து,அவள் தன்துயர் நீக்கிக்***
***கானம் போன கணவனைக் கூட்டி***
***ஒல்காச் செல்வத் துருபொருள் கொடுத்து,***
***நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ!***
***(மதுரைக் காண்டம் -***
***அடைக்கலக் காதை - பா. 67)***

என்ற பாடலின் வழி உணரலாம். அனைவருக்கும் ஈதல் என்ற நற்குணம் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பதை மறைமுகமாக இக்காப்பியம் எடுத்துக் கூறியுள்ளது. ஆகவே, இருப்பவற்றை மற்றவருக்கு ஈதல் சிறப்பு என்ற சிறந்த நீதியைச் சிலப்பதிகாரம் உணர்த்தியுள்ளது தெரிகின்றது.

## நிறைவுரை

முடிவாக, அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல், நிலையாமை, ஆழ்ந்த அன்பு நிலைக்கொள்ளும், இருப்பவற்றை மற்றவருக்கு ஈதல் சிறப்பு ஆகிய ஆறு நீதி சிலப்பதிகாரத்தில் இருந்து கிடைத்துள்ளன. இதைத் தவிர்த்து, இன்னும் பல நீதி இக்காப்பியத்தில் உள்ளதா என்று எதிர்காலத்தில் ஆய்வாளர்கள் ஆராயலாம். ஆகவே, சிலப்பதிகாரம் ஒரு நீதிக் காப்பியம் என்று மேற்காணும் சான்றுகளின் வழி உறுதி செய்ய முடிகின்றது. இதுபோன்ற, இக்காப்பியத்தில் கிடைக்கப் பெற்ற நீதிகளைக் கற்றறிந்து வாழ்க்கையினில் பின்பற்றி, நடைமுறைப்படுத்த வேண்டும். சிலப்பதிகாரம் போன்றுள்ள தமிழ்க் காப்பியத்தை மாணவர்களின் பாடத் திட்டத்திலும் சேர்த்து, இளைய தலைமுறையினருக்கும் அதிலுள்ள நீதி நெறிகளை அடையாளம் கண்டு உய்த்துணரச் செய்தல் வேண்டும்.

## துணைநூற்பட்டியல்

1. காசிராஜன், ஆர்., சங்கரேஸ்வரி எஸ்.பி, (2021) சிலப்பதிகாரம் - கலைக்காப்பியமே, வளர்தமிழ் ஆய்விதழ், மலர் 2, இதழ் 2, பக், 97-103.
2. நவீன், ஜி. அத்திப் பூ மலேசியத் தமிழ்ப் பெருங்காப்பியமா? தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ், மலர் 11, இதழ் 2, பக், 107-113.
3. தங்கராஜ், எல். திருக்குறள் நெறியில் சிலப்பதிகாரம் காட்டும் வாழ்வியல் அறங்கள், தமிழ் பண்பாடு மற்றும் இலக்கிய ஆய்விதழ், மலர் 3, இதழ் 2, பக், 125-133.
4. வெள்ளச்சாமி, பி. சிலப்பதிகாரம் சாற்றும் பெண்களின் இல்லற கடமைள்: ஒரு பார்வை, தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ், மலர் 1, இதழ் 1, பக், 63-70.